பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி17 வியாழக்கிழமை 03.10.2024 கதிர் 330

## இது ரகசியம் அல்ல!

ஊழல்ஒழிப்புத்தான்ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியினதும்ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவினதும் முதன்மை வாக்குறுதியாக இருந்தது. ☞ 2

### மேலும் ஒரு வருடத்தால்

# மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தை நீடிக்க முயற்சி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில்இலங்கைதொடர்பில்ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கைக் கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் இலங்கைத் தமிழ் அசுக் கட்சியின்முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் சுமந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்புநேற்றுகொழும்பிலுள்ளஅமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றது. ஜனாதிபதித் தேர்தலின்பின்னரானநிலவரங்கள்குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இடம்பெற்ற இச்சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் வரை நீடித்தது.

இதன்போது நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளடங்கலாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு, தமிழ் வேட்பாளராக அரியநேத்திரன் நிறுத்தப்பட்ட விவகாரம், ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து சுமந்திரனிடம் தூதுவர் ஜூலி சங் கேட்டறிந்தார். ☞ 2

## கச்சா எண்ணெய் விலை உயர்வு

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை நேற்றைய தினத்தில் கணிசமாக உயர்ந்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர்ச் சூழலால் இந்த விலை உயர்வு ஏற்பட்-டுள்ளது.

பலஸ்தீனத்தில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பை தாக்கி வரும் இஸ்ரேல், லெபனானில் உள்ள ஹவுதி போராளி களையும் தாக்க ஆரம்பித்துள்ளது. ☞ 8

## 37 தரப்புகள் ஏற்கனவே கட்டுப்பணம் செலுத்தின

2024 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்குஇதுவரை37தரப்புக்கள் கட்டுப்பணம்செலுத்தியுள்ளதாகத்தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்துவதற்கான அறிவிப்பைத் தேர்தல் ஆணைக்குழு செப்டெம்பர் 25 வெளியிட்டிருந்தது.

அந்தவகையில், கொழும்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தலா மூன்று தரப்பினரும், அநுராதபுரம், கேகாலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, வன்னி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தலா இரண்டு தரப்பினரும் காலி, மாத்தறை, பதுளை, மொனராகலை ஆகிய மாவட் டங்களில் தலா ஒவ்வொருவரும், திகாமடுல்லவில் 4 தரப்பினரும் மட்டக்க ளப்பில் இதுவரையில் ஏழு தரப்பினரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.



## தேர்தலில் இருந்து ஒதுங்கினார் ரெலோவின் முன்னாள் எம்.பி.

### போட்டியிடப்போவதில்லை என்று வினோ அறிவிப்பு

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடாதிருக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அறிவித்துள்ளார். ☞ 2

## பரீட்சைகள் திணைக்களத்தில் முழு மறுசீரமைப்பு அவசியம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

தேசிய பொதுப் பரீட்சைகளுக்கு முன்பாக பரீட்சை வினாத்தாள்கள் கசியும் நெருக்கடிக்கான தீர்வாக பரீட்சை திணைக்களம் முழுமையான மறுசீரமைக்கப்படவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் இடம்பெற்றிருந்த 3 வினாக்கள் ஏற்கனவே கசிந்துள்ளமை தொடர்பில் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்வுத் தாள் நெருக்கடி நீடிப்பது தேர்வுத் துறையின் தோல்வி என்று பொருள். 12.04.2024 அன்று தேர்வுத்துறையில் முறைகேடுகளில் ஈடுபட்டவர்களின் பட்டியலைத் ☞ 8

## புலமைப் பரிசில் பரீட்சையை மீள நடத்த சஜித் வலியுறுத்து

புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்காலத்தில் மீண்டும் பிரச்சினைக்குரிய சூழ்நிலைகள் ஏற்படாதவாறு அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தற்போதைய பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பரீட்சைக்கு முன்னதாக வினாத்தாள் ☞ 8

## இலங்கை வரும் ஜெய்சங்கரிடம் மீனவர் சார்பில் 4 கோரிக்கைகள்

அரசு முறைப் பயணமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ள இந்தியவெளியுறவுத்துறைஅமைச்சர் கலாநிதிஎஸ்.ஜெய்சங்கருக்குதமிழக மீனவர்கள்சார்பாக4கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேசிய பாரம்பரிய மீனவர்கள் கூட்டமைப் ☞ 8

## நாணய நிதிய அதிகாரிகளுடன் இலங்கைக் குழு நேற்று பேச்சு

### கடனுதவித் திட்டம் குறித்து மீளாய்வு

சர்வதேசநாணயநிதியத்துடனான வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய ஆளும் தரப்பின் எதிர்கால செயற்திட்டம் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டக் குழுவொன்று நேற்று இலங்கைக்கு விஜயம் செய்தது.

சர்வதேசநாயணநிதியத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் 2.9 பில்லியன் டொலர் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் நான்காவது தவணைக் கடனைப் பெறுவது பற்றி ஆராய்வதே ☞ 2

## இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் அதிக இடம்

### நாடாளுமன்றத் தேர்தலில் வழங்குவதற்கு முடிவு

2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அதிக வாய்ப்புக்கள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர்ரஞ்சித்மத்துமபண்டார தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு தலைமைத் துவத்தில் அதிகளவு இடங்கள் வழங்கப்படவேண்டும் என்பது கட்சியின் அடிமட்ட உறுப்பினர் களின்கருத்தாகஇருந்ததால்,அந்தஆலோசனைகளைக் கேட்டுஇந்தமுடிவுஎடுக்கப்பட்டதாகஅவர்தெரிவித்தார்.

அதன்படி,ஒவ்வொருமாவட்டத் திலிருந்தும் பெண்கள் மற்றும் இளைஞர்களை உள்ளடக்கி மூன்று புதிய வேட்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றார் அவர்.

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளுடன் இணைந்து இந்த ஆண்டு நடைபெறவுள்ள ☞ 2

### தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்கினால்

## நாட்டைக் கட்டியெழுப்புவதில் உங்களோடு இணையத் தயார்

### யாழ். வணிகர் கழகம் ஜனாதிபதிக்குக் கடிதம்

தமிழ்மக்களுக்குஅரசியல் தீர்வைவழங்கிஅவர்களையும் இந்நாட்டின் சம பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளுமிடத்து உங்களுடன் இணைந்து நாமும் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்குஆயத்தமாக இருக்கின்றோம்என்றுதெரிவித்து யாழ்ப்பாணம் வணிகர் கழகம் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்குகடிதம்ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாங்கள் ☞ 8

## 9 மாதங்களில் எதிர்பார்த்த வருமானம் கிட்டவில்லை

### நெருக்கடிகள் எழும் சாத்தியம்

2024இல் அரசு எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லைஎன்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்மூலமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திலும் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# 15 மாதங்களின் பின்னர் டொலர் விலை வீழ்ச்சி

அமெரிக்க டொலரின் விற்பனை விலை நேற்று ரூ. 300க்கும் கீழே சரிந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தினசரி மாற்று விகித அட்டவணையின்படி, அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை ரூபாய் 290.30 ஆகவும் விற்பனை விலை ரூபா. 299.35 ஆகவும் பதிவாகியுள்ளது.

இதனால் டொலரின் விற்பனை விலை ஜூன் 08, 2023க்குப் பிறகு முதன்முறையாக 300 ரூபாய்க்குக் கீழே வந்திருக்கிறது.

## இனி இது .....

ஆனால், பதவிக்கு வந்த பின்னர் ஊழல் ஒழிப்புத்தொடர்பில் ஆளும் தரப்பு எதிர்பார்த்த வேகத்தில் செயற்படவில்லை என்பது மக்களின் கருத்தாக இருக்கிறது.

அதிகாரத்தைப்பெற்ற உடனேயே, ஊழல் பெரு முதலைகளுக்கு எதிராக அநுர தனது சாட்டையைச்சுழற்றுவார்என்றுமக்கள்கனவு கண்டனர். ஆனால் எதுவும் நடக்கவில்லை. முடிந்தால் எங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துப் பார் பார்க்கலாம் என்று நாமல் ராஜபக்சவே எழுந்து நின்று அநுரவுக்குச் சவால் விடும் அளவிற்-கு ஊழலுக்கு எதிரான ஜனாதிபதியின் நகர்வுகள் மெத்தமாக உள்ளன. இலங்கையில் கொள்ளையடித்த பணத்தை ருவாண்டாவில் கொண்டு சென்று முதலிட்டார்கள் ராஜபக்சக்கள் என்கிற குற்றச்சாட்டை நிரூபியுங்கள் என்று இப்போது அநுரவுக்கு சவால் விடுகின்றார் நாமல். ஆளும் தரப்புப் பக்கத்திலிருந்து மௌனம்தான் பதிலாகக் கிடைக்கிறது.

அநுரவுன் ஊழல் ஒழிப்பு நடவடிக்கையின் மெத்தனம் அரச அதிகாரிகளிக்கும் குளிர்விட வைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஊழலில்மையமாகஇருப்பவர்கள்பெரும்பாலும் அரச உயர் அதிகாரிகளில் ஒரு தரப்பினரே. ஆட்சியாளர்களுடன் சேர்ந்துகொண்டும் தனியாகவும் இவர்கள் பெரும் ஊழல் செய்வது மட்டுமல்ல அரச பணத்தை வீண்விரயம் செய்வதும், வளங்களை முறைகேடாகப் பயன்படுத்துவதும்கூ இவர்களுக்குக் கைவந்த கலை.

ஆட்சியி மாற்றத்தின் பின்னரும் இந்த அதிகாரிகளின் செயற்பாடுகளிலும் மாற்றங்கள் வரவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்களை முன்னாள் ஜனாதிபதி தனக்குத் தேவையானவர்களுக்கும் நண்பர்களுக்கும் முறைகேடாக வழங்கியிருந்தார் என்று தெரிவித்து, அவற்றில் சிலவற்றை காலி முகத்திடலுக்கு அருகே நிறுத்தி வைத்து 'ஷோ' காட்டியது ஆளும்தரப்பு. ஆனால், சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தற்போதும் தனது அமைச்சின் வாகனத் தொகுதியில் இரண்டு 'சூப்பர் ஜீப்'கள் உட்பட ஐந்து வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றார் என்று தகவல்கள் வருகின்றன.

இந்த வாகனங்களில் பெரும்பாலானவை தற்போது அந்த அதிகாரி குடும்பத்தின் பிள்ளைகள் மற்றும் பேரக்குழந்தைகளின் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றனவாம். ஆட்சி மாற்றத்தின் பின்னரும் அவரது நடவடிக்கையில் எந்த மாற்றமும் இல்லை. யாரும் அவரைக் கேள்வி கேட்பதும் இல்லை. ஆட்சி மாறினாலும் அதிகாரிகளின் ஆட்டம் மாறாது என்கிறார்கள் கொழும்பில்.

சட்டவிரோதமான முறையில் பெருமளவிலான அரச வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாக அண்மையில் கணக்காய்வாளர் நாயகமும் அறிக்கை சமர்ப்பித்திருந்தார். சுகாதார அமைச்சில் அதிகளவான வாகனங்கள் காணாமல் போயுள்ளதாகவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்ட வாகனங்களில் ஒன்று தற்போது அரச வங்கியில் பணிபுரியும் அவரது மகனால் பயன்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தகைய குற்றச்சாட்டுக்கள் குறித்துக்கூட ஆளும் தரப்பில் கவனம் செலுத்தப்படுவதில்லை என்பது மக்களின் பெரும் குறையாக இருக்கின்றது. ஊழல் ஒழிப்பு என்கிற தேசிய மக்கள் சக்தியின் முழக்கம் மீதான மக்களின் ஆர்வத்தை இந்தப் போக்கு வடிய வைத்து வருகிறது.

..............................

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி ஒப்புக்குப் பழைய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுக்கு அழைப்புவிடுத்தாலும் மீண்டும் சேர்ந்து போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவானவையே. இது தொடர்பில் திங்கட்கிழமை இரு தரப்பினருக்கும் இடையே நடந்த சந்திப்பில் வரவேற்கத்தக்க முன்னேற்றங்கள் இல்லை என்பது பழைய செய்தி. திங்கட்கிழமை கொழும்பில் இந்தியத் தூதுவரைச் சந்தித்துப் பேசிய பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் சத்தியலிங்கம், மத்திய குழு உறுப்பினர் சிறீதரன் ஆகியோரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரனும் ஆகியோரும் இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

மீண்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகத் தேர்தலை எதிர்கொள்வதில் ஜனநாயகக் கூட்டணியினர் ஆர்வம் காட்டினாலும் தமிழ் அரசுக் கட்சியினர் பெரிதும் பிடிகொடுத்துப் பேசவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. வேட்புமனுத் தாக்கலுக்கு ஒரு வாரம் 10 நாட்களே இருக்கும் நிலையில் மீண்டும் கூட்டு, ஆசனப் பங்கீடு, தொகுதிப் பங்கீடு பற்றியெல்லாம் பேசி முடிவெடுப்பதற்கு போதிய கால அவகாசம் இருக்குமா என்கிற சந்தேகம் தமிழ் அரசுக் கட்சியினர் பக்கமிருந்து எழுப்பப்பட்டுள்ளது.

இருந்தாலும் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் சேர்ந்து தேர்தலை எதிர்கொள்வது பற்றிய விடயத்தில் இணக்கத்துக்கு வரும் வகையிலான ஒரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. திருகோணமலை தமிழ் அரசுக் கட்சிக்கு விட்டுக்கொடுத்து அதன் சின்னத்தில் அதன் வேட்பாளர் பட்டியலில் மற்றைய கட்சிகள் தமது வேட்பாளர்களைச் சேர்த்துக்கொள்வது என்றும் அதேபோன்று அம்பாறையில் ஜனநாயகக் கூட்டணியின் சின்னத்தில் அதன் வேட்பாளர் பட்டியலில் தமிழ் அரசுக் கட்சி தனது வேட்பாளர்களை நிறுத்த முன்வர வேண்டும் என்றும் ஜனநாயகக் கூட்டணியினர் சார்பில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

திருமலையில் மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு தனது வேட்பாளர் பட்டியலை தயாரிக்க தமிழ் அரசுக் கட்சி இணங்கினாலும் அம்பாறையில் ஜனநாயகக் கூட்டணியின் பட்டியலில் கேட்பதற்கு இணங்கி வராது என்று தகவல்கள் கூறுகின்றன. அம்பாறை மாவட்ட தமிழ் அரசுக் கட்சிக் கிளை இந்த யோசனைக்கு எதிராக உள்ளது. அங்கும் தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு போட்டியிட வேண்டும் என்று அது தீர்க்கமாக நிற்கின்றது. இந்த லட்சணத்தில் இந்த இரு மாவட்டங்களிலும் கூட சேர்ந்து தேர்தல் கேட்பது சாத்தியம்தானா என்கிற கேள்வி இருக்கிறது.

சேர்ந்து கேட்க தமிழ் அரசுக் கட்சி இணங்கிய மாவட்டங்களிலேயே நிலமை இப்படி இருக்கையில் கிழக்கில் இரு தரப்பினரும் தனித்தனியே போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்ட மட்டக்களப்பிலும் சேர்ந்து போட்டியிட வேண்டும் என்று ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரே நச்சரிப்பாக இருக்கிறது என்று தகவல். ரெலோ மற்றும் ஈபிஆர்எல்எவ் சார்பில் அந்த மாவட்டத்தில் உள்ள தலைவர்கள் மட்டக்களப்பிலும் சேர்ந்தே கேட்கவேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்களாம். தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவையருக்கு ஒவ்வொரு நாளும் இது தொடர்பில் குறைந்தது ஒரு அலைபேசி அழைப்பாவது வராமல் இருப்பதில்லை என்கிற அளவுக்கு நச்சரிப்புத் தாங்க முடியவில்லையாம். மாவையர் ஏற்கனவே அரியத்தாரையும் ரணிலையும் ஆதரித்து கட்சிக்குள் தனது பிடியை இழந்துள்ள நிலையில், இவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சமாளிப்பதற்குத் திணறி வருகின்றார் என்றும் தகவல். தமிழ் அரசுக் கட்சியின் பட்டியலில் தமது வேட்பாளர்களையும் உள்ளடக்குவதற்கும் அவர்கள் தயாராக நிற்கின்றார்கள்.

கள நிலவரம் தெரியாமல், புரியாமல் கட்சித் தலைவர்கள் வீராவேசப் பேச்சுப் பேசி தனியே நிற்கிறோம் என்று அறிவித்துவிட மாவட்டக் கிளைகள் பிய்த்துக்கொண்டு தமிழ் அரசுக் கட்சிக்குப் பின்னால் ஓடுவதுதான் நடக்கப் போகிறது போல இருக்கிறது, தமிழ் அரசுக் கட்சி எட்டி உதைக்காத வரைக்கும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## மனித ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய ஆட்சியின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சுமந்திரன், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசமைப்பை உருவாக்குதல் என்பன உள்ளடங்கலாக சில சாதகமான வாக்குறுதிகளை இப்புதிய ஆட்சி வழங்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

தம்மிடம் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பங்கள் இருப்பதாகவும், அதனை தற்போதைய ஆட்சியாளர்களுக்கு வழங்கி உதவுவதற்குத் தயாராக இருக்கிறார் என்றும் அமெரிக்கத் தூதுவர் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நவம்பர் 14 நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியினால் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியுமா எனவும் இதன்போது அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கேள்வி எழுப்பினார். அடுத்த ஆளும் தரப்பாக மாறுவதற்குத் தேவையான சாதாரண பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தியினால் பெற்றுக்கொள்ள முடியும் என்று தான் நம்புகின்றார் எனவும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படுவதாகவும் சுமந்திரன் பதிலளித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர், இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி மேலும் ஒருவருடகாலத்துக்கு நீடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துள்ளார்.

## 9 மாதங்களில் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கக் குறைவான தொகையே பெறப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களமும், இலங்கை சுங்க மற்றும் கலால் திணைக்களமும் ஈட்ட வேண்டிய மொத்த வருமானம் 4,127 பில்லியன் ரூபாய். உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஈட்ட வேண்டிய வருவாய் இலக்கு 2,024 பில்லியன் ரூபாய. இதன்படி, இந்த வருடம் ஜனவரி முதல் செப்டெம்பர் வரையான 9 மாதங்களில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஈட்ட வேண்டிய வருமான இலக்கு வருமானம் 1,518 பில்லியன் ரூபாய். எனினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அரச நிதித் திணைக்களங்களுக்கு வழங்கிய ஆவணங்களில், முதல் ஒன்பது மாதங்களுக்கு 1,498 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்ட முடியும் எனக் குறிப்பிட்டிருந்தது.

இந்த ஒன்பது மாதங்களில் திணைக்களத்தால் அந்தத் தொகையைக்கூடத் திரட்ட -முடியவில்லை என்று நிதி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. செப்டெம்பர் 30 முடிவடைந்த வரி செலுத்தும் காலத்திற்குள் 1,423 பில்லியன் ரூபாய் வரி வருமானத்தையே திணைக்களத்தால் ஈட்ட முடிந்துள்ளது. இதனடிப்படையில் 75 பில்லியன் ரூபாய் வருமானப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்கின்றன நிதி அமைச்சின் தகவல்கள்.

இதனடிப்படையில் பார்த்தால், இவ்வருட இறுதிக்குள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான இலக்கான 2024 பில்லியன் ரூபாயை எட்டுவது கடும் சவாலான பணியாக இருக்கும் என நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்பார்க்கப்பட்ட வருமான அதிகரிப்பு இல்லையேல் பன்னாட்டு நாணய நிதியத்திடம் இருந்து அடுத்த தவணைக் கடனைப் பெறுவதும் நெருக்கடிக்குள்ளாகும் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.2 சதவீத வருமான இலக்கை ஈட்டுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திற்கு இலங்கை அரசு உறுதியளித்திருந்தது. வரி வருவாய் வீழ்ச்சியால் எதிர்பார்க்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியை பெற முடியாது என நிதி அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 12 சதவீத வருமான இலக்கை மட்டுமே எட்டக்கூடியதாக இருக்கும் என்றும் அவை தெரிவிக்கின்றன.

இத்தகைய நிலையில் வரும் நாட்களில் வரிகளை அதிகரிக்க வேண்டி இருக்குமே தவிர அவற்றைக் குறைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்காது என்றும் நிதி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பணப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, திறைசேரி உண்டியல்களை ஏலம் விடப்பட வேண்டிய நிலை ஏற்படும் எனப் பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## இளைஞர்கள் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்புடன் எந்தெந்தக் கட்சிகள் புதிய கூட்டணியை அமைக்கும் என்பது விரைவில் முடிவு செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

## நாணய ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

இதன்படி, நாணய நிதியப் பிரதிநிதிகள் குழுவிற்கும் புதிய ஆட்சியால் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்த நியமிக்கப்பட்டுள்ள பொருளாதாரக் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வேலைத்திட்டம் தொடர்பில் இதன் போது இருதரப்பும் மீளாய்வு செய்ததோடு அதன் எதிர்கால செயற்பாடுகளுக்கான திட்டங்கள் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இலங்கை தொடர்பான சாதகமான அணுகுமுறையை அதிகரித்து தற்போதைய ஆளும்தரப்பின் கீழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய சீர்திருத்தங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்தனர். பொருளாதார உறுதிப்பாட்டுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் சர்வதேசத்தின் தொடர்ச்சியான ஆதரவை நோக்கி ஒரு தீர்க்கமான முன்னெடுப்பும் இங்கு கோடிட்டுக் காட்டப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவில் சிரேஷ்ட தூதுக் குழு தலைவர் டொக்டர் பீட்டர் ப்ரூவர், வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சர்வத் ஜஹான் மற்றும் பொருளாதார நிபுணர் மானவி அபேவிக்ரம ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஹர்சன சூரியப்பெரும, பொருளாதாரக் கொள்கைப் பேரவையின் தலைவரும் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான டொக்டர் அனில் ஜெயந்த, பொருளாதாரக் கொள்கை தொடர்பான பேரவையின் பிரதான உறுப்பினர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, பேராசிரியர் சீதா பண்டார ரணதுங்க, சுனில் கமகே, ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, கலாநிதி நந்தசிறி கிஹிம்பியஹெட்டி, பேராசிரியர் ஓ.ஜி.தயாரத்ன பண்டா, அமரசேன அத்துகோரள ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தேர்தலில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது விலகல் தொடர்பாக அவர் முகப் புத்தகத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார். அது தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பியபோது தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தெற்கிலே மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்களப் பெரும்பான்மை மக்கள் மத்தியிலே அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவுதான் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகியமை.

அதைப்போலவே வடகிழக்கில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களும் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

அது புதியவர்களையும், இளையோரையும் நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்பதாகும். மக்கள் மனங்களில் ஏற்பட்டிருக்கும் இந்த மன மாற்றத்துக்கு நாம் தடையாக இருக்க முடியாது.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும் ; நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை

## சாள்ஸ் நிர்மலநாதன் பகிரங்க அறிவிப்பு



புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இம்முறை நடைபெறுகின்ற நாடாளுமன்ற தேர்தலில் நான் போட்டி யிடவில்லை என்பதை அனைத்து தமிழ் மக்களுக்கும் அறியத் தருகிறேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது முகநூலில் பதிவை விடுத்துள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவித் துள்ளதாவது -

கடந்த 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் அதிகூடிய வாக்குடன் மக்களின் விருப்பத்திற்கு அமைய நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டு இருந்தேன்.

அன்று தொடக்கம் இன்று வரை என்னால் முடிந்த அளவு தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்திருக்கிறேன்.

அத்துடன் எனது பிரதேசங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் என்னால் இயன்றவரை வழங்கியும் மக்கள் போராட்டங்களிலும் பங்கு பற்றி இருக்கிறேன்.

வன்னி மாவட்டத்தில் தேவையான என்னால் முடிந்த பல அபிவிருத்தி திட்டங்களையும் நான் முன்னெடுத்து இருக்கிறேன். தமிழ் மக்கள் எனக்கு இவ்வளவு காலமும் வழங்கிய ஆதரவிற்கும் கௌரவத்திற்கும் நான் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இம்முறை நடைபெறுகின்ற நாடாளுமன்ற தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்பதை அனைத்து தமிழ் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

அதே நேரம் தமிழர்களின் உரிமைக்காக தொடர்ச்சியாக நான் உழைத்துக் கொண்டிருப்பேன் என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

எனக்கு தொடர்ச்சியான ஆதரவை இவ்வளவு காலமும் நல்கிய அனைத்து உறவுகளுக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் உங்களுடன் நான் பயணிப்பேன் என்பதையும் கூறிக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.(05)

# தமிழர்களின் நம்பிக்கையைப் பெறவிரும்பினால் சிங்கள தேசியவாதிகளை கவர்வதை கைவிடுங்கள்

## ஜனாதிபதி அனுரவுக்கு அம்பிகா சற்குணநாதன் 'அட்வைஸ்'



தமிழர்களின் நம்பிக்கையை பெறவிரும்பினால் சிங்கள பௌத்த தேசியவாதிகளை கவரும் முயற்சிகளை ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க கைவிடவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமூக ஊடக பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர் கடும் போக்குடைய சிங்கள பௌத்த தேசியவாதிகளை; கவரும் முயற்சியில் ஈடுபட்டால் தேசிய மக்கள் சக்தி புதிய ராஜபக்ஷக்களாக மாறும் என தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஜனாதிபதி தேர்தலிற்கு பின்னர் இடம்பெறுகின்ற விடயங்களைபார்க்கும் நல்லாட்சி2 என்ற உணர்வும், முன்னர் நடந்ததை மீண்டும் அனுபவிக்கின்ற உணர்வும் எனக்கு ஏற்படுகின்றது.

ஜனாதிபதி வெற்றியடையவேண்டும்,தேசிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்ற பெரும்பான்மை கிடைக்கவேண்டும் என நான் விரும்புகின்றேன்.

அது நடைபெறாவிட்டால் கூட்டணி அரசாங்கமே ஒரேயொரு சாத்தியப்பாடாகயிருக்கும்.

தேசிய மக்கள் சக்தி எந்த கட்சியுடன் கூட்டணி அமைக்கும் என என்னால் ஊகிக்க முடியாது,மேலும் இலங்கை கூட்டணி அரசாங்கங்கள் விடயத்தில் சிறந்த வரலாற்றை கொண்டிருக்கவில்லை.

மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தவறுகள் இழைக்கப் படுவதை தூண்டுகின்றன.நல்லாட்சியில் இடம்பெற்ற விடயங்கள் மீண்டும் இடம்பெறாமலிருப்பதற்காக விமர்சனங்களை முன்வைக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது.

ஜனாதிபதியை விமர்சிப்பவர்களை தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் நியாயமற்ற விதத்தில் தாக்குவதும் கண்டிப்பதும் ஜனாதிபதிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் வாக்களிக்காதவர்களிற்கு நம்பிக்கையை ஏற்படுத்தப்போவதில்லை.

தேசிய மக்கள் சக்தி கருத்துவேறுபாடுகளை பொறுத்துக்கொள்ளாத வழிபாட்டு மனப்பான்மை உள்ளகுழு என்ற எண்ணங்களை இதுவலுப்படுத்தப் போகின்றது.

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற சிங்கள வாக்காளர்களை கவரவேண்டும் என தேசிய மக்கள் சக்தி நினைப்பதை நான் புரிந்துகொள்கின்றேன்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி மூலோபாய ரீதியில் செயற்படவேண் டும் ,நம்பவைக்ககூடி யவற்றில் மாத்திரம் கவனம் செலுத்த வேண்டும்.

ஜனாதிபதிக்கு வாக்களித்தவர்கள் தேசிய மக்கள் சக்தி வித்தியாசமானது என கருதுபவர்கள் விலகிச்செல்லும் நிலையை ஏற்படுத் தக்கூடாது.

கடும் போக்குடைய சிங்கள பௌத்த தேசியவாதிகளை வசீகரித்தால் தேசிய மக்கள் சக்தி புதிய ராஜபக்ஷக்களாக மாறும். வித்தியாசமானதாக அல்லது சிறுபான்மையினத்தவர்கள் நம்பக்கூடிய சக்தியாக விளங்காது.

1994 -2001- மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அதிகாரத்திலிருப்பவர்களுடன் நெருக்கமான உறவுகளை கொண்டிருந்த சிவில்சமூகம் முறைசாரா ஆலோசகராக மாறியது,அல்லது நிழலில் செயற்பட்ட குழுக்களாக ,காணப்பட்டதுடன் செல்வாக்கு செலுத்தியது,சட்டங்களை கூட உருவாக்கியது.

2022 இல் ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றபோது ராஜபக்ஷக்களை விமர்சித்த சில சிவில் சமூக குழுவினர் ரணில்விக்கிரமசிங்கவை ஆதரித்ததுடன்,அவர் மனித உரிமைகளை மீறியதுடன், ஏதேச்சதிகாரிபோன்று ஜனநாயக விரோதமான முறையில் செயற்பட்டவேளை அதனை நியாயப்படுத்தியிருந்தன.

இது ஜனாதிபதி தேர்தலின் பின்னர் மீண்டும் இடம்பெறுவதை காண்கின்றோம்.

சிவில் சமூகத்தின் சில பிரிவினர் ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்கவை விமர்சிக்ககூடாது. அது அவரை பலவீனப்படுத்தும். அவருக்கு கால அவகாசத்தை வழங்கவேண்டும்.

இவர்கள் அவர்களின் தவறுகளை நியாயப்படுத் துகின்றனர்,அல்லது அலட்சியம் செய்கின்றனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது மத்தியவங்கி பிணைமுறி மோசடி,யுத்தத்திற்கு பிந்தைய விவகாரங்களிற்குதீர்வைகாணதவறுதல்போன்றவை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டவேளை இதேபோன்ற கருத்துக்கள் வெளியாகியிருந்தன.

நல்லாட்சி அரசாங்கத்தை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்த தவறியதன் காரணமாகவே ராஜபக்ஷக்கள் மீண்டும் துரிதமாக ஆட்சிக்கு வரமுடிந்தது.

தற்போது அதுபோன்ற நியாயப்படுத்தல்களை காணமுடிகின்றது. உதாரணத்திற்கு தனிப்பட்ட தொடர்புகள் இருப்பதற்காக உரிய தகுதியற்றவர்கள் குறிப்பிட்ட பகுதிகளிற்கு நியமிக்கப்படுதல்

அதிகாரத்திற்கு நெருக்கமாகயிருப்பதை மாத்திரம் முக்கிய பரப்புரை தந்திரோபாயமாக கொண்டிருக்கும் சில சிவில் சமூகத்தினர் எவ்வாறான அடுத்த கட்ட நடவடிக்கையில் ஈடுபடுவது என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

இது அனைத்தையும் உடனடியாக மாற்ற முடியாத இடைக்கால அரசாங்கம் என்பதை ஜனாதிபதியும் அரசாங்கமும் உணர்ந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.அதற்கு மக்கள் ஆணையில்லை மேலும் அது மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய குழப்பங்களை உருவாக்கலாம்.

அரசாங்கம் செய்யவேண்டிய செய்யக்கூடாத சில விடயங்கள்-

உங்களுடைய தனிப்பட்ட தொடர்புகளிற்காக உரிய தகுதியற்றவர்களை பதவிகளிற்கு நியமிக்கவேண்டாம் -ஜனாதிபதி ஊடகப்பிரிவிற்கு மருத்துவர் நியமனம்.

ஏற்கனவே இல்லாத புதிய பதவிகளை உருவாக்கி உங்களுடன் தனிப்பட்ட தொடர்பில் உள்ளவர்களை அதற்கு நியமிக்கவேண்டாம்.

ராஜபக்ஷக்களின் தோல்வியடைந்த பேரழிவு கொள்கைகளை போற்றியவர்களை பதவிகளிற்கு நியமிக்கவேண்டாம்.

ஜனாதிபதி நிறுவனங்களின் செயற்பாடுகளை பொறுப்பேற்ககூடாது,மற்றும் சட்டபூர்வமாக வரையறுக்கப்பட்ட எல்லைகளிற்கு வெளியே செயற்படக்கூடாது- ஊழலிற்கு எதிரான விசாரணைகளிற்கு தலைமை தாங்ககூடாது அதில் தன்னை ஈடுபடுத்தக்கூடாது.

போலியானது மனித உரிமை மீறல்களிற்கு வழிவகுத்தது என நிரூபிக்கப்பட்டுள்ள யுக்திய போன்ற செயற்பாடுகள் கொள்கைகளை நிறுத்துங்கள் .

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றால் சில விடயங்களை புதிதாக ஆரம்பிக்கவேண்டாம் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இருந்து ஆரம்பியுங்கள் -அரசமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டாம்,ஆனால் நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்ததிலிருந்து ஆரம்பியுங்கள்.

தமிழர்களின் நம்பிக்கையை பெறவிரும்பினால் சிங்கள பௌத்த தேசியவாதிகளை கவருவதை நிறுத்துங்கள் தமிழர்களை சொல்லிலும் செயலிலும் சமமான பிரஜைகளாக நடத்துங்கள்.

யுத்தகுற்றங்களி;ல்ஈடுபட்டார்கள் என கருதப்படுபவர்களை உயர்பதவிகளிற்கு நியமிப்பது சிறந்த ஆரம்பமில்லை. -- என்றார்.

(05)

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவித்தல்

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை 2023 (2024) மீள் பரிசீலனை பெறுபேறுகள் மற்றும் இடைநிறுத்தம் செய்து வைக்கப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உரிய விண்ணப்பங்களை ஒக்ரோபர் 01 முதல் ஒக்ரோபர் 08 வரை இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பிக்கமுடியும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2023/2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் விண்ணப்பித்தல் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் அறிந்துக்கொள்ளமுடியும் என குறிப்பிட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்புவது தொடர்பான மேலதிக விவரங்கள் முன்னர் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2023/2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு வழங்கப்படும் வாய்ப்புக்கள், ஏற்கனவே முடிவடைந்த திறன்/நடைமுறைப் பரீட்சைகளின் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்குப் பொருந்தாது எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெளிப்படைத்தன்மை அவசியம்

**பன்னாட்டு நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு நேற்றுக் கொழும்பு வந்தது. இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுக்கும், நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்தின் நான்காம் கட்ட மீளாய்வுக்காக இந்தக் குழுவினர் வந்துள்ளனர். புதிய அரசுத் தலைவராக அநுரகுமார திசநாயக்க பதவியேற்ற பின்னர் நாணய நிதியத்தினர் இங்கு வந்து பேச்சுக்களில் ஈடுபடுவது இதுவே முதற்றடவை.**

**இதற்கு முன்னர் பதவியில் இருந்தவரான அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாணய நிதியத்தின் அனைத்துக் கோரிக்கைகளையும் அப்படியே ஏற்றுக்கொண்டு அதன் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார் என்கிற விமர்சனம் இருந்தது. அரசுத் தலைவர் தேர்தலின்போது பரப்புரைக் களத்தில் இதுவும் ஒரு முக்கிய பேசுபொருளாகத் திகழ்ந்தது. தாங்கள் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தால் நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வரிகளைக் குறைப்போம், கடன்களை மீளச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை மேலும் நீடிப்போம் என்றெல்லாம் எதிர்க் கட்சிகள் வாக்குறுதி வழங்கின. தேசிய மக்கள் சக்தியினரும், அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவும்கூட அத்தகைய வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர்.**

**இந்தப்பின்னணியிலேயே நாணய நிதிய அதிகாரிகள் மீளாய்வுக்காக கொழும்புக்கு வந்துள்ளனர். அவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக அரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட பொருளாதாரக் குழுவினரையும் நேற்றே சந்தித்துப் பேசினர்.**

**"நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வேலைத்திட்டம் தொடர்பில் இதன் போது இருதரப்பும் மீளாய்வு செய்ததோடு அதன் எதிர்கால செயற்பாடுகளுக்கான திட்டங்கள் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன" என்று இந்தப் பேச்சுத் தொடர்பில் அரசுத் தலைவரின் ஊடகப் பிரிவு நேற்று அறிவித்திருந்தது.**

**"இலங்கை தொடர்பான சாதகமான அணுகுமுறையை அதிகரித்து தற்போதைய ஆளும்தரப்பின் கீழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய சீர்திருத்தங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்தனர். பொருளாதார உறுதிப்பாட்டுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் சர்வதேசத்தின் தொடர்ச்சியான ஆதரவை நோக்கி ஒரு தீர்க்கமான முன்னெடுப்பும் இங்கு கோடிட்டுக் காட்டப்பட்டது" என்றும் அரசுத் தலைவரின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்திருந்தது.**

**சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவில் சிரேஷ்ட தூதுக் குழு தலைவர் டொக்டர் பீட்டர் ப்ரூவர், வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சர்வத் ஜஹான் மற்றும் பொருளாதார நிபுணர் மானவி அபேவிக்ரம ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.**

**இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஹர்சன சூரியப்பெரும, பொருளாதாரக் கொள்கைப் பேரவையின் தலைவரும் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான டொக்டர் அனில் ஜெயந்த, பொருளாதாரக் கொள்கை தொடர்பான பேரவையின் பிரதான உறுப்பினர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, பேராசிரியர் சீதா பண்டார ரணதுங்க, சுனில் கமகே, ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, கலாநிதி நந்தசிறி கிஹிம்பியஹெட்டி, பேராசிரியர் ஓ.ஜி.தயாரத்ன பண்டா, அமரசேன அத்துகோரள ஆகியோர் பங்கெடுத்தனர்.**

**இவர்களின் பேச்சின்போது வரிகளைக் குறைப்பது தொடர்பாகவும் கடன்களை மீளச் செலுத்தும் காலப் பகுதியை நீடிப்பது தொடர்பாகவும் என்ன பேசப்பட்டன என்கிற விவரங்கள் எவையும் ஆளும் தரப்பால் வெளியிடப்படவில்லை. தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியினரால் பல்வேறு பொருள்களுக்குமான பெறுமதி சேர் வரி (வற்) குறைப்பு உள்ளிட்ட பல வரிக் குறைப்பு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அரச பணியாளர்களுக்கான சம்பள அதிகரிப்புத் தொடர்பிலும் வாக்குறுதியளிக்கப்பட்டது. கடனை மீளச் செலுத்துவதற்கான கால அவகாசம் இன்னும் நீடிக்கப்படும்போது கிடைக்கும் பொருளாதார சாதகத்தன்மை இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவும் அத்தகைய நிலையில் மக்களின் வாழ்க்கைச் சுமை குறைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். எனவே நாணய நிதியத்துடனான பேச்சுக்களின் அடைவு என்ன என்பதை அறிவதில் மக்கள் ஆர்வத்துடன் இருக்கின்றனர்.**

**ஆனால், நேற்றைய பேச்சுக்களில் அது பற்றிய அடைவு என்ன என்பதை ஆளும் தரப்பு முறையாக வெளிப்படுத்தவில்லை. இந்தப் பேச்சுக்களின் அடைவுகள் குறித்து ஆளும்தரப்பு வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்வது மிக மிக அவசியம். மக்கள் ஒரு பெரும் எதிர்பார்ப்புடன் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அவர்கள் புதிய ஆட்சியாளர்களிடம் இருந்து புதிய அணுகுமுறையை எதிர்பார்க்கிறார்கள். முந்தைய ஆட்சியாளர்களைப் போன்றே மூடுமந்திரமாக எல்லாவற்றையும் மேற்கொள்வதை எதிர்க்கிறார்கள். எனவே அரசுத் தலைவரும் புதிய ஆளும் தரப்பும் நாணய நிதியத்துடனான பேச்சுக்கள் தொடர்பில் மக்களிடம் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்வது அவசியம்.**

# போர்களற்ற உலகத்தை நோக்கி...

**மஞ்சுளா**

உயிர்களால் நேசிக்கப்படும் இயற்கை அன்னை எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்ற பொதுவுடைமைக் கொள்கையுடன் இயங்குவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். வானத்திலிருந்து பொழியும் மழைநீர் தனி ஒருவருக்கு மட்டும் பொழியாமல் எல்லா உயிர்களுக்கும் பொதுவாகவே பொழிகிறது. மலைகளையும், நீர்நிலைகளையும், தாவரங்களையும் ஒருசிலரே பயன்படுத்த முடியும் என்றுசொல்லி மற்றவர்களுக்குத் தடைவிதிப்பதில்லை. ஆனால், இயற்கையிலிருந்து பிறந்த மனிதன் மட்டும் தன்னல உணர்வால் இயற்கை வளங்களையும், மற்றவர் நலன்களையும் கபளீகரம் செய்து கொண்டே இருக்கிறான்.

உரிமைக்காக, உடைமைக்காக ஒருவர் மற்றவருடன் சண்டையிட்டுக் கொள்வது உலகம் தொடங்கிய நாள்முதல் இன்றுவரை தொடர்கிறது.



மற்றவரின் உரிமையைப் பறிக்காமலும், தன் உரிமையில் பிறர் தலையிட அனுமதிக்காமலும் வாழ முற்படும் வாழ்க்கையே பொருள் நிறைந்தது. இதில் பிரச்சினை ஏற்படும்போது போர் தொடங்குகிறது. இருப்பினும் பண்புடைய மக்கள் போர்களற்ற உலகத்தைப் படைக்கும் முயற்சியை ஒருபோதும் கைவிட்டதில்லை.

நாட்டை விரிவுபடுத்தும் நோக்கத்தில் எல்லையைக் காரணமாகக் கொண்டு போர்கள் வெடிக்கின்றன. இன்னொரு பக்கம் சார்ந்திருக்கும் மதத்தைச் சொல்லிக் குண்டு வைக்கும் கொடுமை நடந்து வருகிறது. இனத்தின் அடிப்படையில், சாதியின் அடிப்படையில், மொழியின் அடிப்படையில் ஓர் இனத்தைக் கொன்று குவித்து வருகின்றனர். பயங்கரவாதமும், வன்முறையும் தலை விரித்தாடும் சூழலில் மக்கள் எப்போதும் அச்சத்துடனே வாழ வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது.

எந்தகாலகட்டமாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும் போது பேரழிவும், அதைத் தொடர்ந்து வறுமையும், பசியும், மீண்டும் கணக்கில்லா உயிரிழப்பும் ஏற்படுகின்றன. சொந்த நிலத்தில் அகதிகளாக மாறும் பேராபத்தும், பொருளாதாரச் சரிவும், வேறு நாடுகளில் தஞ்சமடையும் அவல நிலையும் ஏற்படுகின்றன.

போர்களற்ற அமைதியான உலகத்திற்கு அடிப்படையாக அமைவது நீதியைப் பாதுகாக்கும் செயல்பாடு. சுருக்கமாகச் சொன்னால் நீதி நிலைத்திருக்கும் இடத்தில் அமைதி குடிகொள்ளும் என்பது அறிஞர்களின் கருத்து.

கட்டவிழ்க்கப்படும் அநியாயச் செயல்களால் மக்களிடையே அவநம்பிக்கையும், பயமும் பரவுகின்றன. அமைதியான சூழலைக் குடும்பத்திலிருந்து தொடங்க வேண்டும் என்பதே சரியான அணுகுமுறை. குடும்பத்தில் அமைதி இருக்குமானால் பிள்ளைகள் வன்முறையற்றவர்களாக வளரும் வாய்ப்பு கிடைக்கிறது. வேலை இடத்தில் அமைதி வேண்டும் என்று நினைப்பது போலச் சமுதாயத்திலும் அமைதியான சூழல் நிலவ வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்த உலகத்தின் எந்த மூலையிலாவது போர் தொடங்குமானால் அது பதற்றத்தையும் வேலைவாய்ப்பின்மையையும் தொற்றுநோயையும் கூடவே சுற்றுச்சூழல் மாசையும் கொண்டு வந்து சேர்த்துவிடும். இதிலிருந்து, சமாதானம் அமைதி என்பது தனி மனித நிலையிலிருந்து உலகளாவிய நிலை வரை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகத் தெரிகிறது. எனவே சமாதானப் போக்கைக் கைகொள்வதன் அவசியம் விளங்கும்.

இயற்கைச் சீற்றங்களான நிலநடுக்கம், காட்டுத்தீ, வெள்ள அபாயம் போன்றவற்றால் வரும் அழிவைக் காட்டிலும் போரின் காரணமாக ஏற்படும் செயற்கை அழிவால் மனித இனம் நிலை குலைந்து போகிறது. முதல் உலகப் போரின் போதும், இரண்டாம் உலகப் போரின் போதும் மனித இனம் அனுபவித்த கொடுமைகளை வார்த்தைகளால் சொல்லி முடியாது.

தற்போது இஸ்ரேல் – ஹமாஸ் போர், உக்ரைன் – ரஷ்யா போர், இவற்றின் தீவிரத்தன்மையைக் கண்டு உலக நாடுகள் அச்சம் கொண்டுள்ளன.

பல அழிவுகள் நடந்த பிறகு மனிதர்கள் சமாதானத்தின் முக்கியத்துவத்தை உணர்வது என்பது கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஈடானது.

உலகத்தை அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்கும், பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், வாழ்வை மேம்படுத்துவதற்கும், பண்பாட்டைப் பேணி வளர்ப்பதற்கும் அமைதியைப் பரப்ப வேண்டியது இன்றைய தேவை. அஹிம்சையை, அன்பை மற்றவர்களுக்குச் சொல்லித் தருவதற்கு முன்னால் நமக்குள் அமைதியைக் மேற்கொள்வது முக்கியம்.

எனவே அமைதியைப் பேணுவது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் என்று உணர்வோம்! சமாதான உணர்வை உண்டாக்குவதை ஒரு வேலையாக நினைக்காமல் அதை வாழ்க்கையின் அங்கமாக உணரும் பட்சத்தில் உலக மக்களிடையில் சாந்தியையும், சமாதானத்தையும் உருவாக்கிவிடலாம்.

பயங்கரவாதம், வன்முறையிலிருந்து மனித இனத்தை மீட்டெடுத்து, அமைதியை நிலைநாட்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 21-ஆம் தேதியை உலக அமைதி தினமாக அனுசரிக்க ஐ.நா. அறிவித்தது. இந்த ஆண்டு உலக அமைதி தினத்தை 'அமைதிக் கலாசாரத்தை வளர்த்தல்' என்ற தலைப்பில் கொண்டாட உலக நாடுகளுக்கு ஐ.நா. அழைப்பு விடுத்துள்ளது.

ஒரு நாகரிக சமூகத்தின் அடையாளமே எல்லோரையும் அரவணைத்துச் செல்வதில் அடங்கியிருக்கிறது. புரிதலாலும், சகிப்புத்தன்மையாலும், இரக்கத்தாலும் உறவாடுவோம்! மனித உரிமைகளை மதிப்பதன் வழியாகச் சகமனிதரைக் கண்ணியத்துடன் நடத்துவதற்கு உறுதி ஏற்போம்! நமது மனநிலையில் இப்படியான மாற்றம் நிகழும்போது இணக்கமான வாழ்வு தானாகவே வந்து சேர்ந்துவிடும். கருத்து வேறுபாட்டை மாற்றும் வழியாகச் சண்டையைத் தேர்வு செய்தால் முடிவு விபரீதமாகவே இருக்கும். வேறுபாடுகளை சமரசமான முறையில் தீர்க்க முற்படுவதே அமைதிக்கான பாதை!

காலைக்கதிர் Kalaikkathir

# பிரதமர் அலுவலகத்தில் காந்தி ஜெயந்தி தினம்







இந்தியாவின்தேசபிதாஎன்றழைக்கப்படும் மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள பிரதமர் அலுவ லகத்தில் நேற்று (புதன்கிழமை) காந்தி ஜெயந்தி அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பிரதமர் ஹரினி அமரசூரியவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் மகாத்மா காந்தியின் திருவு ருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இங்குள்ள இந்த மார்பளவுச் சிலை மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த தின நினைவை முன்னிட்டு 2019ஆம் ஆண்டில் இந்தியாவால் அன்பளிப்பாக வழங் கப்பட்டிருந்தது.



மகாத்மா காந்தி தியான நிலையில் இருக்கும் இந்த 42 அங்குல வெண்கல சிலை பத்மபூசண் விருதுபெற்ற ராம் வஞ்ஜி சுதரால் வடிவமைக்கப்பட்டதாகும்.

குஜராத்தின் கேவாடியாவில் உள்ள உலகின் மிகவும் உயரமான வெண்கலச் சிலையான சர்தார் பட்டேல் சிலையும் சுதரால் வடிவமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# 2,200 வெளிநாட்டு சிகரட்டுகளுடன் பலாகலவில் சந்தேகநபர் கைது

அநுராதபுரம், கெக்கிராவ, பலலுவெள பிரதேசத்தில் விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்த வெளிநாட்டு சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்புள்ளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெக்கிராவ பலாகல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 2,200 வெளிநாட்டு சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிரியாகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை கல்கிரியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தால் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு உதவி



யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் துரை பிரணவன் நிதி அனுசரணையுடன் யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஊடாக 40 படுக்கை விரிப்புக்கள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஊடாக அதன் ஸ்தாக உறுப்பினரும் அதன் பிரதான நிர்வாகியுமான லயன் ஜெ. ரஜீவன் ஊடாக மேற்படி படுக்கை விரிப்புகள் விடுதி தாதியர்களிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆகியவற்றின் செயலாளர் லயன் சி. ஹரிகரன், சுன்னாகம் லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் லயன் விஜயராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.(05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலூம, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# அயலுறவுத்துறை அமைச்சரை சந்தித்தார் அமெரிக்கத் தூதர்



இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்று (புதன்கிழமை) சந்தித்துள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் இது குறித்து தெரிவித்துள்ளதாவது –

இலங்கையின் வெளிவிவகார அமைச்சரை அவரது புதிய பதவியில் சந்திக்க முடிந்துள்ளமைகுறித்துமகிழ்;ச்சி அடைகின்றேன்.

அமெரிக்க இலங்கை கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கும், பாதுகாப்பு, வர்த்தகம், மனிதஉரிமைகளைஉறுதிசெய்தல்போன்றபகிரப்பட்டமுன்னுரிமைகளில் இணைந்து செயற்படுவதற்கும்எதிர்பார்த்துள்ளோம்.

தேசிய ஐக்கியம்,நீதி மற்றும் வெளிப்படைதன்மைமிக்கஆட்சி ஆகியவற்றில் இலங்கையின் முன்னேற்றத்திற்கு உதவுவது குறித்து அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது. (05)

# மோ.சைக்கிள் மோதி வயோதிபர் உயிரிழப்பு

மாத்தறை – அக்குரஸ்ஸ வீதியில் ஹித்தெட்டிய பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மாத்தறையிலிருந்து அக்குரஸ்ஸ நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, படுகாயமடைந்த வயோதிபர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹித்தெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிக விசாரணைகளைமாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# விலையுயர்ந்த பொருள்களுடன் பசறையில் இருவர் கைதாகினர்

புதையல் தோண்டியதால் கிடைத்ததாகக் கூறப்படும் விலையுயர்ந்த மாணிக்கக் கற்கள் மற்றும் சிலைகளுடன் இரண்டுசந்தேகநபர்கள்பொலிஸ்விசேடஅதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பரமங்கட பசறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேகாலை ஹெட்டிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 26 மற்றும்63வயதுடைய இருவரேகைதுசெய்யப்பட்டுள்ளனர்.


கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டியதால் கிடைத்ததாகக் கூறப்படும் விலையுயர்ந்த 11 மாணிக்கக் கற்கள் , செப்பு மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட 4 சிலைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக பசறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# புத்தளம் மாவட்ட வேட்பாளர்கள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் கலந்துரையாடல்





எதிர்வரும் பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் எவ்வாறுபோட்டியிடுவது என்பது தொடர்பான கலந்துரையாடல் புத்தளம் நுஹ்மான் மண்டபத்தில் திங்கட்கிழமை இரவு நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே ரவூப் ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

புத்தள மாவட்டம் சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது குறித்த ஒரு கலந்துரையாடலை நாங்கள் நடாத்தி இருக்கிறோம்.

இதில் மூன்று விவகாரங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

குறிப்பாக இன்று பரவலாக புத்தளத்தில் நீண்டகாலமாக நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாததன் காரணமாக கடந்த முறை எல்லா அமைப்புகளும் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து போட்டியிட்ட காரணத்தினால் ஓர் உறுப்பினரை பெறுகின்ற வாய்ப்பு இருந்ததை அடிப்படையாக வைத்து அதே முறையில் மீண்டும் ஒரு முயற்சி செய்யப்படவேண்டும் என்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் நடந்துகொண்டிருப்பதாகவும் இது குறித்த அமைப்பினரோடு சந்திப்பதற்கு நாங்கள் வரவேண்டும் என்பதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அது குறித்து சாதகமாக பரிசீலிப்பதற்கு தயாராக இருக்கிறோம். எனவே, இந்த சந்திப்பை நடாத்துவதற்கு நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். அதேவேளை, எங்களுடைய கட்சியினர் தனித்து வாக்கு கேட்பதற்கும் அதேநேரம், குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியோடு நாடு முழுவதிலும் நாங்கள் சேர்ந்து கேட்பதான பொதுவான தீர்மானத்துக்கும் பாதகமில்லாமல் நாங்கள் இந்த கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்கிறோம். சில நாள்களில் உறுதியான தீர்மானங்களை நாங்கள் எடுப்போம். – என்றார்.

இந்த கலந்துரையாடலில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (05)


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர்
Kalaikkathir

# மகிமை பொருந்திய நவராத்திரி



நவராத்திரி பண்டிகை புரட்டாசி அமாவாசை முடிந்துபிரதமைதொடங்கிதசமிவரைகோலாகலமாக கொண்டாடப்படுகிறது. மாசி மாதத்தில் சிவனுக்கு சிவராத்திரி கொண்டாடுவது போல புரட்டாசியில் ஒன்பது நாட்கள் சக்தியை வழிபட நவராத்திரி பண்டிகை கொண்டாடுகிறோம்.

இந்த ஆண்டு ஐப்பசி மாதம் முதல்நாள் அக்டோபர் 03ஆம் தேதி இன்று வியாழக்கிழமை நவராத்திரி தொடங்குகிறது. ஒன்பது நாட்கள் அனுஷ்டித்து பத்தாம் நாள் 12 ஆம் திகதியன்று விஜயதசமியுடன் நிறைவடையும்.

பிரதமை தொடங்கி தசமி வரை ஒன்பது இரவுகள் அம்பிகையை அலங்கரித்து சிறப்பாக வணங்குவதன் மூலம் செல்வ வளம் பெருகும் என்பது ஐதீகம்.

உலகத்தின் இயக்கத்திற்கு எல்லாம் சக்தி தான் ஆதாரம்.அந்த சக்தியை வழிபடுவதே நவராத்திரி திருவிழா. அம்மனை வழிபட்டால் அனைத்து ஆற்றலையும்பெறலாம். சக்தி இல்லை என்றால் இந்த உலகம் இயங்காது. அந்த சக்தியை வழிபடுவதற்காக உருவானதுதான் நவராத்திரி பண்டிகை. நவராத்திரி பண்டிகையின்ஒன்பதுநாட்களும்ஒன்பதுவகையான அலங்காரம் செய்து வழிபடுவது வழக்கம். ஒவ்வொரு அம்மன் ஆலயத்திலும் அம்மனுக்கு தினசரி ஒவ்வொரு வடிவத்தில் அலங்காரம் செய்யப்பட்டுக் கொண்டாடப்படுகிறது.

அம்மனை சக்தி வடிவமாக இச்சா, கிரியா, ஞான சக்தி என மூன்று சக்திகளாக வழிபடுகின்றோம். வாழ்க்கையில் கல்வி செல்வம் வீரம் ஆகிய மூன்றும் முக்கியம். மூன்றும் கலைமகள், அலைமகள், மலைமகள் என மூன்று சக்திகளை வழிபடுகின்றோம். வாழ்க்கையில் மூன்றும் முக்கியம். வீரத்திற்கு மூன்று நாட்கள், செல்வத்திற்கு மூன்று நாட்கள், கல்விக்கு மூன்று நாட்கள் ஒதுக்கி ஒன்பது நாட்கள் வழிபடுகின்றோம். இதன் மூலம் நமக்கு சக்தி கிடைக்கும் அந்த சக்தியை நாம் நல்ல விசயத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

பிரதமைநவராத்திரியின்முதல்நாளில்தேவியான மகேஸ்வரி பாலா, மது கைடபர் அழிவுக்குக் காரணமான தேவி. இன்றைய தினம் மல்லிகை, வில்வம் கொண்டு அலங்கரிக்கவேண்டும். வெண் பொங்கல் நைவேத்தியம் செய்யலாம்.

துவிதியை இரண்டாம் நாள் தேவி கவுமாரி தேவியாக போற்றப்படுகிறாள். அவளே ராஜ ராஜேஸ்வரியாகவும் ஆராதிக்கப்படுகிறாள். முல்லை, துளசியால் அலங்காரம் செய்து புளியோதரை நிவேதனம் பண்ண வேண்டும்.

திரிதியை மூன்றாவது நாளுக்கு உரிய வாராகி அன்னை, கன்யா கல்யாணி என்று அழைக்கப்படுகிறாள். செண்பகம் மற்றும் சம்பங்கிகள் இவளுக்கு உகந்தவை. சர்க்கரை பொங்கல் படைத்து வழிபட வேண்டும்.

சதுர்த்திநான்காம்நாளில்அருள்பவள்மகாலட்சுமி. இவள் ரோகிணி என்று அழைக்கப்படுகிறாள். மல்லிகை பூக்களால் அலங்காரம் செய்து, அன்னம் நைவேத்தியம் செய்து வழிபட வேண்டும்.

பஞ்சமி ஐந்தாம் நாளில் அன்னையை வைஷ்ணவியாகவும்மோகினியாகவும்அலங்கரிப்பர். முல்லைப்பூ அலங்காரமும் தயிர் சாதமும் இவளுக்கு ஏற்றவை.

சஷ்டி ஆறாவது நாளுக்குரிய தேவி வடிவம் இந்திராணி. சர்பராஜ ஆசனத்தில் தேவி அமர்ந்திருக்கும் கோலத்தில் பூஜை செய்வது வழக்கம். தேவிக்கு ஜாதி மலரே உகந்தது. தேங்காய் சாதம் படைத்து வணங்கலாம்.

சப்தமி ஏழாம் நாளில் தேவி மகாசரஸ்வதி, சுமங்கலி என அழைக்கப்படுகிறாள். இந்த அன்னைக்கு தாழம்பூ சூடி, தும்பை இலைகளால் அர்ச்சனை செய்ய வேண்டும். எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து வழிபடலாம்.

அஷ்டமி எட்டாவது நாளில் தேவியானவள் நரசிம்மிதருமி. நரசிம்மி வடிவின் சினம் தணிந்த கோலம் இது. இந்த நாளில் அன்னை அன்பே உருவாக அருள்பாலிக்கிறாள். இவளுக்கு உகந்த ரோஜா மலரை சூடி, சர்க்கரை பொங்கல் படையல் இட்டு வழிபடலாம்.

நவமி ஒன்பதாம் நாளில் அம்பிகை, சாமுண்டி மாதா, அம்பு, அங்குசம் தரித்தலலிதாபரமேஸ்வரியாக அன்னையைவழிபடுவதுவழக்கம். இன்றையதினம் பால் பாயாசம் நைவேத்தியம் செய்து வழிபடலாம். தாமரை மலர்களால் அலங்கரித்து

விஜயதசமி பத்தாவது நாள் விஜய தசமி. விஜயம் என்றாலே வெற்றி! தீயவை அழிந்து நன்மை பெருகும். நாம் தொடங்கும் காரியம் வெற்றி பெறும் என்பதற்காகவே விஜயதசமி கொண்டாடப்படுகிறது. நவராத்திரியின்போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் பூஜிப்பவர்களுக்கு எதிலும் நலம்பெறும் வகையில் வெற்றி கிடைக்கும்.

விரத பலன் நவராத்திரி விழாவின் ஒவ்வொரு நாளும் சிறப்பு என்றாலும் அதில் விசேஷமான நாட்கள் கடைசி மூன்று நாட்கள். சக்தியற்றவர்களாக இருப்போர் நவராத்திரி விரதத்தில் பூஜை செய்வதற்கு மிகவும் முக்கியமான நாட்கள் சப்தமி, அஷ்டமி, நவமி தினங்களாகும். இந்த மூன்று நாட்களும் விரதத்தோடு பூஜித்தால் ஒன்பது நாட்கள் பூஜித்த பலன் கிடைக்கும். நவராத்திரி விரதம் இருப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பயன் அடைவார்கள். இந்த ஆண்டு தீமைகள் ஒழிய அம்பிகைஅருள்புரியவேண்டும்என்றுஅனைவரும் வேண்டிக்கொள்வோம்.

**நவராத்திரி கொலு**

நவாத்திரிபொம்மைகளைச்செய்ய, ஒரேகழிமண் மூலப்பொருளாகிறது. ஆனால் கிருஷ்ணராகவும், ராமராகவும், முருகனாகவும், சிவனாகவும், அம்பாளாகவும் பல பொம்மைகள் ஒரே மண்ணில் உருவாகிறது. பரப்பிரமம் பலவகை வடிவங்களை எடுத்து நம்மைக் கரையேற்றுவதை நவராத்திரிக் கொலு உணர்த்துகிறது.

அப்படி மகத்தான நவராத்திரி விரதத்தை நாமும் அனுஷ்டித்து வாழ்வில் வளம் பெறுவோமாக..

**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு**

# நவராத்திரி சிறப்பம்சம்

## கழல்பணிந்தேன் துர்க்கா காத்திடுவாய் நீயே !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .... ஆஸ்திரேலியா**



ஈரமொடு வீரம் எனக்கருள வேண்டும்
இரக்கமொடு கருணை எனக்கீய வேண்டும்
காதலொடு நாளும் கவிபாடி உந்தன்
காலடியில் நிற்க கருணைபுரி தாயே

மனமமரும் இருளைப் போக்கிடுவாய் தாயே
மாயவலை சிக்கா காத்திடுவாய் தாயே
சினமான தீயை ஒழித்திடுவாய் தாயே
தினமுமுனைப் பாடிப் பரவுகிறேன் தாயே

நோயணுகா வண்ணம் காத்திடுவாய் தாயே
தாயாகி நிற்கும் தயைவுடைய துர்க்கா
பேயாகி பித்தாகி மனமலையா வண்ணம்
பேரொளியே துர்க்கையே காத்திடுவாய் தாயே

மனநோயை நீக்கும் மருத்துவனும் நீயே
மனவழுக்கைப் போக்கும் மருந்துமே நீயே
கவலையிலா மனத்தைத் தந்திடுவாய் தாயே
கழல்பணிந்தேன் துர்க்கா காத்திடுவாய் நீயே

நோயற்ற வாழ்வைத் தந்திடுவாய் தாயே
நுடங்காத உள்ளம் கொடுத்திடுவாய் தாயே
தாயான உன்னை நானெண்ணி நிற்க
தயைபுரிவாய் தாயே துர்க்கை அம்மாவே

# சர்வதேச மார்பக புற்றுநோய் தினத்தில் மட்டக்களப்பில் விழிப்புணர்வு ஊர்வலம்









சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் சர்வதேச மார்பக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நகரில் பாரிய விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று (புதன்கிழமை) காலை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின்ஏற்பாட்டில்மட்டக்களப்புபோதனாவைத்தியசாலை, கிழக்கு பல்கலைக்கழகம், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் என்பன இணைந்துஇந்தமார்பகபுற்றுநோய் விழிப்புணர்வு ஊர்வலத்தை முன்னெடுத்தன.

மட்டக்களப்பு மாவட்ட தொற்றா நோய் தடுப்பு நிபுணர் வைத்திய கலாநிதி இ.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த பேரணியில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். முரளீஸ்வரன் உட்பட வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதாரத்துறை சார்ந்தோர் என பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

நேற்று ஆரம்பமாகும் மார்பக புற்றுநோய் மாதத்துக்கான மட்டக்களப்பு மாவட்ட பிரதான நிகழ்வாக இந்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி மீனிசை பூங்காவில் ஆரம்பமான இந்த பேரணி மட்டக்களப்பு திருமலை வீதி ஊடாக சென்று, மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவில் நிறைவடைந்தது.

அதனைத் தொடர்ந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் விழிப்புணர்வு செயலமர்வும் நடத்தப்பட்டது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

## தேர்தலில்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு வழிவிட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். மக்கள் மனங்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டு இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும் இடம் கொடுப்பதே அரசியல் கட்சிகளினதும், தலைவர்களினதும் தலையாய கடமையாக இருக்கவேண்டும்.

என்னுடையதும் ஏனைய சில முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களதும் போட்டியிடாதிருக்கின்ற முடிவு ஏனையவர்களும் உணர்ந்து முடிவெடுக்க உந்துதலாக அமையும் எனக் கருதுகின்றேன்.

வன்னிமாவட்டத்தில் அரசியல் தெளிவுள்ள ஆளுமை மிக்க இளம் தலைவர்களை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற மக்களின், இளைஞர்களின் விருப்பங்கள் நிறைவேற மக்கள் மனதறிந்து எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவெடுத்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலமைப் பரிசில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியாவதன் மூலம் பிள்ளைகள் மற்றும் பெற்றோர்கள் என இருவருமே அவதிக்குள்ளாகும் நிலை மிகவும் வருத்தமளிக்கிறது. இந்நிலைமையினால் பல வருடங்களாகப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பெரும் ஏமாற்றமடைகின்றனர்.

பரீட்சைக்கு முன்னதாக வினாத்தாள்கள் வெளியாகியுள்ளமையினால் இலங்கையின் தேசிய பரீட்சை முறைமையின் நேர்மை தொடர்பில் பொதுமக்களிடையே சந்தேகங்கள் எழுப்பியுள்ளது - என்றுள்ளது.

## பரீட்சைகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்வுத்துறை சமர்ப்பித்துள்ளது. முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் 473 பேர். இந்த நபர்கள் தேர்வுகளில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளனர் - என்றார்.

இதேவேளை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் முன்கூட்டியே வெளியிடப்பட்டதா என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டதுடன், அதற்கமைய, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான எந்தவொரு தீர்மானத்தையும் உரிய விசாரணைகள் முடியும் வரை எடுக்க வேண்டாம் என மனித உரிமைகள் ஆணைக்குழு கல்வி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினால் இந்த கோரிக்கைகள் அடங்கிய கடிதம் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெங்ஷங்கருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1974ஆம் ஆண்டு கச்சத்தீவு ஒப்பந்தத்தின் ஆறாவது சரத்தில் உள்ள பாரம்பரிய மீன்பிடி உரிமையை உறுதி செய்ய வேண்டும்.

இலங்கை சிறையில் உள்ள 125க்கு மேற்பட்ட இந்திய மீனவர்களையும், 190க்கும் மேற்பட்ட விசைப்படகு மற்றும் நாட்டு படகுகளையும் உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டு தமிழக கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் மீன்பிடி படகுகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட 10க்கு மேற்பட்ட இந்திய மீன்பிடி படகுகளை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற 4 கோரிக்கைகள் குறித்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## கச்சா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குப் பதிலடியாக ஈரான் பல நூறு ஏவுகணைகளைக் கொண்டு இஸ்ரேலைத் தாக்கியுள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்தப் போர்ப் பதற்றம் காரணமாகவே உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது.

இந்த நிலை எதிர்காலத்திலும் தொடர்ந்தால் உலகசந்தையில் எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கும். மேலும், மேற்கத்திய நாடுகளில் குளிர்காலம் தொடங்கியுள்ளதால், அந்நாடுகளின் எரிசக்தி தேவை அதிகரித்துள்ளதால், உலக சந்தையில் எரிபொருள் விலை மேலும் உயரப் போகிறது.

## நாட்டைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையிட்டு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நீண்ட காலமாக ஆட்சி முறைமை மாற்றத்துக்காகப் போராடிய தங்களுக்கு கிடைத்த இந்த வெற்றியானது நாட்டில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என நாம் எண்ணுகின்றோம்.

இரண்டு முறை ஆயுத வழியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயன்றும் தங்களின் அமைப்பு தோல்வி கண்டது. அதன் பின்பு தாங்கள் விரும்பிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த ஜனநாயக முறையில் நீங்கள் எடுத்த நீண்ட கால முயற்சியின் பின் இன்று இந்த நாட்டு ஜனாதிபதி தேர்தல் மூலம் உங்கள் கனவை சாத்தியமாக்கியுள்ளீர்கள். இதை ஒரு வரலாற்று சாதனையாகக் கருதி இந்த வெற்றியை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

தமிழ் மக்களை பொறுத்தளவிலே தங்கள் உரிமைக்காகவும், அடக்குமுறைகளுக்கு எதிராகவும் நீண்ட காலம் அஹிம்சை வழியில் போராடி எந்த தீர்வும் கிடைக்காத நிலையில், கல்வியில் தரப்படுத்தல் முறைமை அமுல்படுத்தப்பட்டமையினாலும், யாழ். நூல் நிலையம் எரிக்கப்பட்டமையினாலும், எமது உரிமைகள் மறுக்கப்பட்டமையினாலும் தமிழ் இளைஞர்கள் விரக்தியின் மத்தியில் ஆயுத போராட்டத்தில் இறங்கினார்கள்.

அந்த போராட்டம் வெளிநாடுகளின் உதவியுடன் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டது. ஆனால் தமிழ் மக்களுக்கான எந்தவித தீர்வும் இன்று வரை வழங்கப்படவில்லை. இது துரதிர்ஷ்டமானது.

தமிழ் மக்களுக்காக போராடிய இளைஞர்கள் இன்னும் சிறைகளிலே வாடுகின்றார்கள். காணாமல் போனவர்களுக்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. போரின்போது கைப்பற்றப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் இன்னும் நண்பர்களின் வீடுகளிலும், உறவினர்களின் வீடுகளிலும், தற்காலிக குடிசைகளிலும் வாழுகின்றார்கள். போர் காரணமாக இந்தியாவிற்கு தப்பிச் சென்றவர்கள் அகதிமுகாம்களில் இருக்கின்றார்கள். அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

ஏற்கனவே இந்தியாவிலிருந்து திரும்பியவர்களுக்கான புனர்வாழ்வு இன்னும் அளிக்கப்படவில்லை. இவை எல்லாம் தங்கள் முன்னுரிமை அடிப்படையில் உள்ள தீர்க்கப்படவேண்டிய அடிப்படைப் பிரச்சினைகளாகும்.

அடுத்ததாக, தமிழ் மக்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். வடக்கு கிழக்கு அவர்களின் தாயகம். அவர்களுக்கென தனித்துவமாக கலை, கலாசார பண்பாடு உண்டு. இவற்றை பாதுகாக்க அவர்களுக்கு நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு தேவை என்பதை தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

இந்த நாட்டிலே தமிழ் மக்கள் பல வகைகளில் புறக்கணிக்கப்படுகின்றார்கள். அரச உயர் பதவிகள் தொடக்கம் சிற்றூழியர்கள் வரை வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்படுகின்றார்கள். தமிழ் பிரதேசங்கள் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படுகின்றன. பல வளங்களைக் கொண்ட வட மாகாணத்தில் பொருளாதார ரீதியாக புறக்கணிக்கப்படுகின்றது.

இதனாலேயே பெரும்பாலான தமிழ் மக்கள் புலம்பெயர்கின்றார்கள். எல்லா புறக்கணிப்புக்களின் எதிரொலியாகவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டார். சுமார் ஒரு மாத கால முயற்சியின் பயனாகவே அந்த வேட்பாளர் கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இவை எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு தாங்கள் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்த்துவைப்பீர்கள் என்று நம்புகின்றோம். பொது வேட்பாளர் முன்நிறுத்திய கோரிக்கைகளையும் தேர்தல் காலத்தில் பரப்புரையின்போது தாங்கள் குறிப்பிட்ட விடயங்களையும், தங்களின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதையும் கருத்தில் எடுத்து தமிழ் மக்களுக்குரிய நிரந்தரத் தீர்வுகளை விரைவாக நீங்கள் வழங்குவீர்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் சுபீட்சத்தை ஏற்படுத்தும் என்று நம்புகின்றோம்.

எமக்குரிய தீர்வுகளை எல்லாம் வழங்கி எம்மையும் இந்நாட்டின் சம பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளுமிடத்து உங்களுடன் இணைந்து நாமும் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம்.

இதன் மூலம் தங்கள் தலைமையில் இந்த நாட்டில் ஒற்றுமையும் பொருளாதார மேம்பாடும் சுபீட்சமும் நிலவும் என்று எதிர்பார்க்கின்றோம். மீண்டும் தங்களுக்கு எங்களின் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றுள்ளது.




காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# வலிகாமம் வடக்கில் மதுபானசாலை அமைப்பதை தடுத்து நிறுத்துங்கள்

## ஊரணி, தையிட்டி, மயிலிட்டி மக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

ஊரணி, தையிட்டி, மயிலிட்டி ஆகிய கிராமங்கள் உள்ளடங்கிய பகுதியில் புதிதாக மதுபானசாலை அமைப்பதை தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு வலி.வடக்கு ஊறணி,தையிட்டி, மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் கையேழுத்திட்டு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்கள்.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது –

மதுபானசாலை அமைப்பதனை தடுத்து நிறுத்தல் தொடர்பாக ஊரணி, தையிட்டி, மயிலிட்டி ஆகிய கிராமங்கள் உள்ளடங்கியபகுதியில்புதிதாகமதுபானசாலைஅமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இம் மதுபானசாலை எமது கிராமத்தில் அமையப் பெறுவதனை கிராம மக்களாகிய நாம் பின்வரும் காரணங்களினால் எமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் நாம் பல கஷ்டங்களை எதிர்கொண்டு 30 வருட போரும் 15 வருட போரின் பின்னரான அவலங்களும் எம்மை அழித்து தற்போது பல வருடங்களின் பின்னர் எமது சொந்த இடங்களிற்கு திரும்பி வீடுகள் அமைத்து அனைத்து அபிவிருத்திகளையும் புதிதாக மேற்கொண்டு மகிழ்வாக வாழ்ந்து வரும் எமக்கு மீண்டும் ஒரு அழிவை நாம் சந்திக்க அனுமதியோம் எமது பிள்ளைகளை கல்வியில் முன்னேற்றி எதிர்கால இளைஞர் சமுதாயத்தை வளம் மிக்கவர்களாக கட்டியெழுப்புவதற்கு பெரிதும் துன்பப்பட்டு வருகின்றோம்.

வளர்ந்து வரும் இச்சமுதாயத்தில் தற்பொழுது போதைப்பொருள் பாவனையில் பல குடும்பங்களில் இளைஞர் யுவதிகள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருங்கால சமூகம் சீரழிந்து வருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறானசூழ்நிலையில்எமதுகிராமத்தில்இவ்வாறான துஸ்பிரயோகங்கள் தோன்றாது இருக்க வேண்டும் என்பதில் நாம் பெரிதும் அக்கறையாக உள்ளோம். பெண் தலைமைத்துவ குடும்பங்கள் இளம் பெண் பிள்ளைகள் கடற்தொழில் மேற்கொள்ளும் குடும்பங்களை சார்ந்தவர்கள் பாதிக்கபடகூடிய நிலையும் குடும்ப வன்முறைகள் கலாசார சீரழிவுகள் ஏற்படகூடிய சூழல் உருவாகுகிறது.

இதனால் இம்மதுபானசாலையினை எமது பிரதேசத்தில் அமைப்பதனை தடுத்து நிறுத்தியுதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் மேற்படி எமது சமூகத்தின் நன்மை கருதியும் கீழ்க்குறிப்பிடப்படும் ஏனைய காரணங்களினாலும் இவ் மதுபானசாலை இவ்விடத்தில் நிறுவுவதனை தடைசெய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுதவுமாறு மீண்டும் தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

மதுபானசாலைக்கு மிக அண்மையில் புனித ஊறணி அந்தோணியார்ஆலயம்அமைந்துள்ளது.மதுபானசாலைக்கு மிக அண்மையில் பாடசாலைகள் அமைந்திருத்தல், மதுபானசாலைக்குமிகவும்அண்மையில்காங்கேசன்துறை மகாவித்தியாலயம் அமைந்துள்ளதும் மீளக்குடியமராத பிரதேசம், மீளகுடியேற்றம் முழுமையாக நிறைவு பெறாமையினால் அபிவிருத்தி பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரதேசமாகவுள்ளது.

இதன் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்ப்பாணம் மாவட்டச்செயலாளர் நீதிபதி நீதவான நீதிமன்றம் மல்லாகம், பிரதேச செயலாளர் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை செயலாளர், பிரதேசசபை வலிகாமம் தெல்லிப்பளை, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காங்குசன்துறை, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(05)

# பொல்லால், தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு சிறுவன் கொலை

## ஒருவர் கைது

மஹவெல, மடவல பிரதேசத்தில் பொல்லால் மற்றும் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டுசிறுவன்ஒருவன் கொலைசெய்யப்பட்டுள்ளதாக மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஹவெலபிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனேகொலைசெய்யப்பட்டுள்ளார்.

இந்தசம்பவம்தொடர்பில் மடவலபிரதேசத்தைச்சேர்ந்த 55 வயதுடைய சந்தேக நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பானமேலதிக விசாரணைகளைமஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு கியூபா முழு ஒத்துழைப்பு வழங்கும்

## அந்நாட்டுத் தூதுவர் ஜனாதிபதியிடம் உறுதி

நாட்டில் டெங்கு நோயை ஒழிப்பதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குவோம் என இலங்கைக்கான கியூபா தூதுவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தபோதே கியூபா தூதுவர் அண்ட்ரஸ் மார்ஷலோ கொன்ஷாலேஸ் கொரிடோ இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது, அவர், இலங்கையுடனான ஒத்துழைப்பை பலப்படுத்த தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் கூறியுள்ளார்.(05)

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி ஆகியோருக்குஇடையில்சந்திப்புஒன்றுநடைபெற்றுள்ளது.

இந்தசந்திப்பு நேற்று (புதன்கிழமை) நடைபெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் நாட்டின் தற்போதைய அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த பிற பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. (05)





### யாழ்ப்பாணத்தில்

# மகாத்மா காந்தியின் பிறந்த நாள் நிகழ்வு



மகாத்மா காந்தியின் 155 ஆவது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று (புதன்கிழமை) யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்திய துணைத்தூதர் சாய் முரளி, வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி,யாழ் மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் யருள் மற்றும் சமய சமூக பிரதிநிதிகள், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது காந்தீயம் ஏடு வெளியிட்டு வைக்கப்பட்டு அதன் பிரதி அனைவருக்கும்



வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை இந்திய துணைத் தூதரக அதிகாரிகளால் துவிச்சக்கர வண்டி பவனியொன்றும் மேற்கொள்ளப்பட்டமுடன் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன்மரநடுகையும்நடைபெற்றது.(05)

# ஓட்டோ விபத்தில் தந்தை உயிரிழப்பு

## இரு பிள்ளைகள் காயம்

மாத்தறை, தெனியாய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தந்தை உயிரிழந்துள்ளதுடன் இரு பிள்ளைகள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, ஓட்டோ சாரதியான தந்தை மதுபோதையில் இருந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில், ஓட்டோ சாரதியான தந்தையும்பின்புறத்தில்அமர்ந்திருந்தஇரண்டு பிள்ளைகளும் காயமடைந்துள்ள நிலையில் தெனியாயவைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட பின்னர் தந்தை உயிரிழந்துள்ளார்.(05)

# அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கு புதிய திசையை தீர்மானிக்குக

## யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் அழைப்பு

அரசியல்கட்சிகள்ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளை தீர்மானிக்க வேண்டும் எனயாழ்.கத்தோலிக்கமறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல்தொடர்பான யாழ். கத்தோலிக்கமறைமாவட்டகுருக்கள் ஒன்றியத்தின் ஊடக அறிக்கையிலே இதனை தெரிவித்துள்ளார்கள்.

அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது -

புதிய மாற்றத்தை வேண்டி தமிழ் மக்களே தமிழ் அரசியல் கட்சிகளே, நாம் ஓர் இனமாக வரலாற்றுப்பெரும்பாய்ச்சல்ஒன்றை மேற்கொள்ளவேண்டியதருணத்தில் நிற்கிறோம். நடந்துமுடிந்தஜனாதிபதி தேர்தலின்பின்னணியில்எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தல்,தமிழ்மக்கள் மத்தியில் பெருமாற்றத்திற்கான எதிர்பார்ப்புகளைதூண்டியிருக்கிறன.

சமகால அரசியல் கட்சிகளின் உடைவுப் போக்குகள், உட்கட்சிக் குழப்பங்கள் தீர்க்கமான அரசியல் தெளிவற்ற தன்மை போன்ற பல காரணிகளால் தமிழ் மக்களிடையே குழப்பங்களும் வேதனையும் நீடிக்கின்றன. இந்நிலைதொடருமானால்எதிர்வரும் பாராளுமன்றதேர்தலில்கணிசமான அளவு தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தக்கவைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

'அனுர' எனும் அலையைத் தொடர்ந்து 'மாற்றம்' என்பது மந்திரச்சொல்லாக பலராலும் உச்சரிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே இந்த வரலாற்றுத் திருப்புமுனையில் நின்றுகொண்டு புதிய வியுகங்களை வகுக்க வேண்டியது எமது தார்மீக வரலாற்று கடமையாக உள்ளது. வரலாற்று சறுக்கலை மீண்டும் ஒருமுறை நிகழவிடாது எமது அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளை தீர்மானிக்க வேண்டும்.

எம்மிடையேஇருக்கும்பிளவுகள், வேற்றுமைகள், சாதி, சமய, பிரதேசவாதங்களை தாண்டி நகரவேண்டிய இடத்தில் வரலாறு எம்மை தற்போது நிறுத்தியுள்ளது. குறிப்பாக பாரம்பரிய அரசியல் பிரதிநிதிகள் புதிய அரசியல் போக்குக்கு இடம்விட்டு நகர்ந்து அர்ப்பணிப்புள்ள நேர்மையான ஊழலற்ற இளையோர்களை உள்வாங்கி வழிநடத்துவது பெரும் மாற்றம் ஒன்றிற்கான சிறந்த முன்மொழிவாக இருக்கும்.

மையயரோட்டு அரசியலை தாண்டி கிராமமட்ட சமூக அமைப்புக்களின் கருத்துக்களை உள்வாங்கி வேட்பாளர்களை தெரிந்தெடுப்பது மிகச்சிறந்த நகர்வாக இருக்குமென்பதுடன், பால்நிலை சமத்துவம், பெண்பிரதிநிதிதுவம் குறித்தும் கருத்தில் எடுக்கவேண்டியதும்

அவசியமாகும். செல்திசை தெரியாதுதடுமாறும்அவலநிலையில் உள்ள தமிழ் இனத்திற்கு சரியான திசைகளைக் காட்டுவது எமது வரலாற்று கடமையென்பதை உணர்ந்துகொள்ளுவோம்.

தூரநோக்கற்ற அரசியற் குழப்பங்களால் எமது பாராளுமன்ற பிரதிநிதிதுவத்தை இழந்துபோகக்கூடிய ஆபத்து அண்மித்துள்ள இவ்வேளையில் ஊழலற்ற நேர்மையான அரசியல் போக்கு குறித்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்பு 'புதிய மாற்றத்தை' வேண்டி நிற்கின்றது.

நேர்மையான அரசியல் தெளிவு மிக்க ஒரு புதிய அரசியல் நகர்வை மேற்கொண்டு ஒரு தேசிய இனமாக எழுந்து நின்றால் மட்டுமே தமிழ் இனம் தன் இருப்பின் உரிமைகளுக்கான பேரம் பேசும் சக்தியாக எழுந்து நிற்க முடியும் என்பதையும் பேரன்போடு வலியுறுத்துகின்றோம். - என்றுள்ளது.

(05)

# கொள்கலன் போக்குவரத்து கட்டணம் குறைக்கப்பட்டது

எரிபொருள் விலை குறைக்கப்பட்டமைக்கு அமைய கொள்கலன்போக்குவரத்துகட்டணம்செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் 4 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக கொள்கலன் வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்கொள்கலன்வாகனஉரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள கருத்து தெரிவிக்கையில் -

'அரசாங்கம் எரிபொருள் விலையை குறைத்ததால், ஒட்டோ டீசல் விலை 24 ரூபாவிலும் மற்றும் முன்பு 10 ரூபாவிலும் குறைக்கப்பட்டுள்ளது.

அந்த விலைகளுடன் ஒப்பிடுகையில், இறக்குமதி மற்றும்ஏற்றுமதிகொள்கலன்போக்குவரத்துகட்டணத்தை 4 சதவீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒட்டுமொத்த பொதுமக்களுக்கும் நிவாரணம் வழங்கும் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை குறைக்க எமது செயற்குழு தீர்மானித்துள்ளது என தெரிவித்துள்ளார். (05)

# 5 சிறுமிகள் மீது கண்டியில் பாலியல் துஸ்பிரயோகம்

## வயோதிபர் கைது

ஐந்து சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் வயோதிபர் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கண்டி பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கண்டி பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவினருக்குக்கிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, பேராதனை பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதுடைய வயோதிபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

08 முதல் 14 வயதுக்குட்பட்ட ஐந்து சிறுமிகளே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஐந்து சிறுமிகளும் பரிசோதனைக்காகக் கண்டிதேசியவைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# கட்டுப்பணம் செலுத்தியது தமிழர் மரபுரிமைக் கட்சி

## வவுனியாவில் போட்டியிட தயாராகிறது



நாடாளுமன்ற தேர்தல் 2024 ல் வன்னி தேர்தல் தொகுதியில் சுயாதீனமாக போட்டியிடுவதற்கான கட்டுபணத்தை தமிழர் மரபுரிமை கட்சியினர் நேற்று (புதன்கிழமை) வவுனியா தேர்தல்கள் ஆனைக்குழுவில் செலுத்தியிருந்தனர்.


அக்கட்சியின் தலைவர் நேசராசா சங்கீதன் தலைமையில் குறித்த கட்டுபணம் செலுத்தப்பட்டிருந்தது.

பணத்தை செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவித்த அக்கட்சியின் தலைவர் –

தாங்கள் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் முல்லைத்தீவில் சுயேச்சைக்குழுவாக போட்டியிட்டு பல பிரதேச சபை உறுப்பினர்களை கொண்டுள்ள கட்சி என்றும், நடக்கவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் இளம் சமுதாயத்திற்கு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும், அதற்கான தளத்தை தாங்கள் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்த அவர், தமது கட்சியானது வடக்கு மற்றும் கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் சுயேச்சையாக போட்டியிடவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.(05)

# திருமலை 6ஆம் கட்டை காணிகளுக்கான பாதைகளை தடை செய்துள்ள தனிநபர்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு



திருகோணமலை நிலாவளிவீதியில் ஆறாம் கட்ட பிரதேசத்தில் லட்சுமி நாராயணன் கோவிலுக்கு அருகில் உள்ளகாணிகளின்பாதைகள்தனியார் ஒருவரால் தடைப்படுத்தப்பட்டு அது தொடர்பான முப்பது குடும்பங்களின் மேல் பாதிக்கப்பட்டு உள்ளதாக அப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் செவ்வாய்க் கிழமை ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தினர்.

குறித்த நடவடிக்கைகள் முன்னாள் கிழக்கு ஆளுநரின் தலையீட்டில் ஏற்படுத்தப்பட்டதாக அப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 40 வருடங்களுக்குமேற்பட்ட காலப்பகுதியில் அவர்கள் உறுதி காணிகள்தான்வசித்துவந்தநிலையில் பிரான்ஸிலிருந்து வருகை தந்த ஒரு நபர் தன்னுடைய காணி என்று கூறிய நிலையில் இவ்வாறான செயற்பாடு ஒன்று இடம்பெற்று தற்போது வழக்கு நடந்து கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக ஒரு கிறிஸ்தவ மதஸ்தலம் ஒன்று பாதை மூடப்பட்டு முடக்கப்பட்டுள்ளது. அதற்கு வழி வரும் மக்கள் அநேகர் பிரச்சினை எதிர்கொள்வதாக குறித்து கிறிஸ்தவ மத பாதிரியார் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இங்கு கிறிஸ்தவ தேவாலயம்,பாலர் பாடசாலை செல்லும் பாதைகள் தடைப்படுவதனால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பகுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

1982 ஆம் ஆண்டில் காணியை கொள்வனவு செய்து சட்ட ரீதியான குடியேற்றங்களை அமைத்துவந்தோம் தற்போதுஒருவர்தன்னுடையகாணிஎன அப்பட்டமாகஉரிமைகோருகிறார்.இதன் மூலம் பாரிய மன உளைச்சல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம் என அப் பிரதேச மக்களை கவலை வெளியிடுகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்த தீர்வும் கிடைக்கவில்லை எனவும் ஒரு சில காடையர்களை கொண்டு தங்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விட்டனர். எனவே எங்களது பூர்வீக குடியிருப்பு காணிகளை பாதுகாத்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.
(05)

# அதிக கட்டணம் அறவிடும் பஸ்கள் குறித்து முறையிட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

பயணிகளிடமிருந்து அதிக கட்டணம் அறவிடும் பஸ்கள் தொடர்பில் முறையிட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்துஆணைக்குழுதெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் 4.24 சதவீதமாக பஸ் கட்டணம் குறைக்கப்பட்டிருந்த நிலையில் ஆரம்ப கட்டணம்27ரூபாவாகநிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், நிர்ணயிக்கப்பட்ட பஸ் கட்டணத்தைவிடஅதிககட்டணம்அறவிடும் பஸ்கள் தொடர்பில் முறையிட 1955 அல்லது 071 25 95 555 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக கட்டணம் அறவிடும் பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.
(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2024இல் வெளியிடப்பெற்றது